1987 மார்ச் 2]

என்று சொல்வதைப்போல் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது, வெளியிலே தெரிவது சரியாக இருக்காது. இந்தத் துறையைப் பொறுத்தவரையில் மத்திய அரசாங்கம் ஒதுக்கு கின்ற முழுப் பணத்தையும் நாம் செலவழித்துக் கொண்டிருக் கிறோம். எனவே தாங்கள் கூட முயற்சி எடுத்து அதற்காக தனியாக ஒதுக்கித் தந்தால் அந்த வேலையை எடுத்துக் கொள் வதில் எங்களுக்கு எந்தவிதமான ஆட்சேபனையும் இல்லை. இங்கு இருப்பது நிதி பிரச்சினைதான்.

திரு. எஸ். பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்கு தொடர்ச்சி மலை வளர்ச்சி திட் டத்தின் கீழ் மலைப் பகுதிகளில் பல சாலைகள் நெடுஞ்சாலைத் துறையினால் சர்வே செய்யப்படுகின்றன. அப்படி சர்வே செய் யப்படும்போது வனத் துறை அதிகாரிகளால் சர்வே செய்வதற் குக் கூட அனுமதி மறுக்கப்படுகிறது. அவ்வாறு வனத் துறை அதிகாரிகள் அனுமதி மறுக்கப்படுவதால் சர்வே தாமதமாக ஆகி றது. ஆகவே, அதைத் தடுத்து சர்வே செய்வதற்கு அனுமதி அளிக்கப்படுமா என அமைச்சர் அவர்கள் மூலமாக அறிய ஆசைப் படுகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, இதற்குச் சம்பந்தம் இல்லாத கேள்வி என்றாலும், மத்திய அர சாங்கம் வனத்தைப் பாதுகாக்க வேண்டும் என்பதற்காக இப்படி ஒரு கடுமையான திட்டத்தை அவர்கள் அமுலாக்கிக் கொண்டி ருக்கிறார்கள். எனவே தேவை இல்லாத இடங்களில் மரங்களை வெட்டக் கூடாது என்பதை அவர்கள் கடுமையாக பார்த்துக் கொண்டு இருப்பதால் இந்த நிலை ஏற்படுகிறது. இருந்தாலும் எங்கே அவசியம் ஏற்படுகிறதோ அந்த இடத்தில் நாம் மத்திய அரசாங்கத்தின் அனுமதியோடு அந்தப் பணியை துவக்குவதில் எந்தவிதமான பிரச்சினையும் இருக்காது. சில நேரங்களில் அனுமதி வருவதற்குக் காலதாமதம் ஏற்படுகின்றபோது இப்படிப் பட்ட சங்கடங்கள் ஏற்படுகின்றன. எனவே மத்திய அரசாங் கத்திடம் நாம் கேட்டு அந்த அனுமதியைப் பெற்று செய்கின்ற போது அந்த நிலைமை வராது.

கொடைக்கானலில் பழனி—பள்ளங்கி மலைச்சாலை திட்டம்.

12—(*வினா எண். 8640) திரு. பி. கே. எம். முத்துராம லிங்கம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கொடைக்கானல் தாலுக்காவில் பழனி-பள்ளங்கி மலைச் சாலை திட்டம் எந்த நிலையில் உள்ளது.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: இச்சாலை எந்தத் திட் டத்தின் கீழும் எடுத்துக் கொள்ளப்படவில்லை.

[1987 மார்ச் 2

டாக்டர் த. முகம்மது சலீம் : தலைவர் அவர்களே, கொடைக்கானல் மெயின் சாலையிலிருந்து கொடைக்கானல் வரை இப்பொழுது சாலை பழுதடைந்திருக்கிறது. வேலைகளை பார்த்து வருகிறார்கள். ஆனால் முக்கியமான இடங்களில் வருடக் கணக்கில் வேலைகள் பார்த்தும் வேலைகள் சுணங்கிக்கிடப்பதால், இப்பொழுது அது ஒரு முக்கிய கோடைவாசஸ்தலமாக இருப்பதால் அந்த வேலைகளை அரசு சீக்கிரம் முடிக்க முடுக்கி விடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, ஏற்கனவே என்னிடத்தில் உள்ள குறிப்பில் அது தார் சாலையாக இருக்கிறது, இப்பொழுது பேருந்துகள் எல்லாம் சென்று கொண்டிருக்கின்றன என்று சொல்லியிருக்கிறார்கள். பழுதடைந்து இருக்குமேயானால் பராமரிப்பிலே அதை எடுத்துக் கொண்டு செய்வதற்கான ஏற்பாட்டைச் செய்யலாம்.

திரு. பொன் முத்துராமலிங்கம் : தலைவர் அவர்களே, பழனி-பள்ளங்கி சாலை என்பது மேற்குத் தொடர்ச்சி மலை வளர்ச்சி திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படுமா? அதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, இப்பொழுது அந்தக் குறிப்பு என்னிடத்தில் இல்லை. தனியாக பார்க்கின்றபோது அதிலே சேர்ந்திருந்தால் செய்யலாம். சேர்க்க வாய்ப்பு இருந்தாலும் செய்யலாம்.

போக்குவரத்துக் கழக ஓட்டுநர்களுக்கு தனியார் மருத்துவமனையில் கண் பரிசோதனை செய்ய அனுமதி.

13—(*வினா எண். 10502)—திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரியும் ஓட்டுநர்களுக்கு கண் பரிசோதனை செய்ய தனியார் மருத்துவ மனையில் அனுமதி அளிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, 8 அரசு போக்குவரத்துக் கழகங்களின் ஓட்டுநர்களுக்கு தனியார் மருத்துவ மனைகளில், கண் பரிசோதனையும் 6 போக்குவரத்துக் கழகங்களின் ஓட்டுநர்களுக்கு கண் பரிசோதனை அரசு மருத்துவ மனைகளிலும் செய்யப்படுகிறது.

திரு. மெ. ஆண்டி அம்பலம் : தலைவர் அவர்களே, தனியார் மருத்துவமனையில் அதிகமாக பீஸ் வாங்குகிறார்கள் என்ற நிலைமை இருக்கிறது என்றாலும் ஒரு குறிப்பிட்ட சிகிச்சைக்காக என்று மொத்தமாக அந்த ஊழியர்களுக்கு அளிப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.